பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 02 2025 **WEDNES DAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு. இன்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

2. பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. மீன் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நிதி மற்றும் ஒப்புதல்களை வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

5. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் வித்யா ராம்ராஜ் தங்கப்பதக்கத்தையும், ஸ்ரீவர்தனி வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

<<<<<>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு. இன்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்புடன் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து பிரதமர் பேச்சு நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்கவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<>>>>>

பாதுகாப்பு தளவாடங்களை இறக்குமதி செய்த நிலை மாறி, தற்போது அவை ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற விமான கண்காட்சியின் நிறைவு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பீரங்கிகள் முதல் ஏவுகணைகள் வரை தற்போது ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உள்நாட்டிலேயே பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<>>>>>

நாடுமுழுவதும் உள்ள கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சி சீராக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கூட்டுறவுத் துறைக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, கூட்டுறவுத்துறை வலுவடையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம், விமான பயணச் சீட்டுகள் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கூட்டுறவுத்துறைக்கென தனி அமைச்சகத்தை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தான் ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

உலக அளவில் எரிசக்தி பயன்பாட்டில் இந்தியாவின் பங்களிப்பு அடுத்த 25 ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் எரிசக்தி வார மாநாட்டை ஒட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதில் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

நொய்டாவில் சர்வதேச ஜவுளி கண்காட்சியை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் பங்கேற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜவுளி வர்த்தகத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. கிரிராஜ் சிங் கூறினார்.

<<<<<>>>>>

மீன் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

ஆசிய மீன்வளர்ப்பு அமர்வின் வருடாந்திர கூட்டத்தை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மீன்வளத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

விவசாயிகளுக்கான கடன் அட்டை திட்டம், மீனவர்களுக்கு நீட்டிக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

மீனவர்கள் நலனுக்காக பல்வேறு காப்பீட்டு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிரதமரின் இல்லந்தோறும் சூரியசக்தி திட்டம் ஓராண்டை நிறைவு செய்து, நாளை இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ், 2027ஆம் ஆண்டுக்குள் ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கு சூரிய மின்சக்தி வழங்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 8 லட்சத்து 46 ஆயிரம் குடியிருப்புகளுக்கு சூரியமின்சக்தி வழங்கப்பட்டுள்ளது.

மாதந்தோறும் இதன் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தல் தொடர்பான புத்தகத்தை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார், தேர்தல் ஆணையர்கள் திரு. **Gyanesh Kumar,** திரு. **Sukhbir Singh Sandhu** ஆகியோர் இதனை வெளியிட்டனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இந்த மக்களவைத் தேர்தல் குறித்த அனைத்து புள்ளி விவரங்களும் இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் உலகின் மிகப் பெரிய ஆன்மிக திருவிழாவான மகாகும்பமேளாவில் புனித நீராடுவோரின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது.

இன்று மட்டும் ஒரு கோடியே 94 லட்சத்திற்கும் மேற்பட்டோர்புனித நீராடினர்.

இதுவரை 46 கோடியே 25 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பக்தர்களின் வசதிக்காக பிரயாக்ராஜிலிருந்து இயக்கப்படும் ரயில்கள் குறித்து, ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இதற்கென அமைக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு அறைக்கு சென்ற அமைச்சர், ரயில்களின் இயக்கம் குறித்து விரிவாக அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

பயணிகள் எவ்வித சிரமுமின்றி பயணிப்பதற்கு ஏதுவாக சிறப்பு ரயில்கள் இயக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

<<<<<>>>>>

மேற்குவங்கத்தின் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் திருமதி. **Chandrima Bhattacharya** நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசினார்.

மாநில அரசு ஊழியர்களுக்கு 4 சதவீத அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

ஊரக பகுதிகளில் சாலை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, 9 ஆயிரத்து 600 கோடி ரூபாய் செலவில் 16 லட்சம் புதிய வீடுகள் கட்டப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் திருமதி. **Chandrima Bhattacharya** வெளியிட்டார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நிதி மற்றும் ஒப்புதல்களை வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவை இன்று புதுதில்லியில் சந்தித்து இதுதொடர்பான கோரிக்கை மனுவினை வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோர மற்றும் வன சுற்றுச்சூழல் அமைப்புகளை மேம்படுத்துவதற்காக 27 கோடி ரூபாய் நிதியினை வழங்குமாறு அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள புலிகள் காப்பகம் அருகே வசிப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்காக 71 கோடி ரூபாய் நிதியினை வழங்க வேண்டும் என்றும் அந்த கோரிக்கை மனுவில் கோரப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் உறுதியளித்ததாக தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், மகா கும்பமேளா குறித்து ஆன்மிக சொற்பொழிவாளர் திரு. சாமிநாதனுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணலின் இரண்டாவது பகுதி இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் வித்யா ராம்ராஜ் தங்கப்பதக்கத்தையும், ஸ்ரீவர்தனி வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

உத்ராகண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் அவர்கள் இப்பதக்கத்தை கைப்பற்றினர்.

<<<<<>>>>>

தில்லி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kaliyanda Poonacha -** ஜிம்பாப்வேயின் **Courtney John Lock** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 2-6, 7-6, 10-6 என்ற செட்கணக்கில் செக்குடியரசின் **Dalibor Svrcina – Marek Gengel** இணையை வென்றது.

<<<<<>>>>>

இந்தியாவுக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 357 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 20 புள்ளி இரண்டு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 134 ரன் எடுத்துள்ளது.

<<<<<>>>>>

**Delray Beach** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, மெக்ஸிகோவின் **Miguel Angel Reyes Varela** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<END>>>>>